# மார்ச் - 09 - வெள்ளி

## தூய உரோமைப் பிரான்சீஸ்

## தோளினின்று உன் சுமையை அகற்றினேன்: திபா. 81:6

**முதல் வாசகம் ஓசே 14 : - 1 – 9**

இஸ்ரயேலே! உன் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வா் நீ உன் தீச்செயலால் வீழ்ச்சியுற்றாய். இம்மொழிகளை ஏந்தி ஆண்டவரிடம் திரும்பி வந்து இவ்வாறு சொல்லுங்கள் "தீவினை அனைத்தையும் அகற்றியருளும், நன்மையானதை ஏற்றுக்கொள்ளும் நாங்கள் எங்கள் வாய்மொழியாம் கனிகளை உமக்கு அளிப்போம். அசீரியர் எங்களை விடுவிக்கமாட்டார்கள் குதிரைமேல் நாங்கள் ஏறமாட்டோம் எங்கள் கைவினைப் பொருள்களை நோக்கி, "எங்கள் கடவுளே!" என்று இனிச் சொல்லமாட்டோம் திக்கற்றவன் உம்மிடத்தில் பரிவைப் பெறுகிறான்" எனச் சொல்லுங்கள். அவர்களுடைய பற்றுறுதி யின்மையை நான் குணமாக்குவேன் அவர்கள்மேல் உளமார அன்புகூர்வேன். அவர்கள் மேலிருந்த என் சினம் தணிந்துவிட்டது. நான் இஸ்ரயேலுக்குப் பனி போலிருப்பேன் அவன் லீலிபோல் மலருவான் லெபனோனின் மரம்போல் வேரூயஅின்றி நிற்பான். அவனுடைய கிளைகள் விரிந்து பரவும் அவன் பொலிவு ஒலிவமரம் போல் இருக்கும் லெபனோனைப்போல் அவன் நறுமணம் பரப்புவான். அவர்கள் திரும்பிவந்து என் நிழலில் குடியிருப்பார்கள் கோதுமைபோல் தழைத்தோங்குவார்கள். திராட்சைக் கொடிபோல் செழிப்படைவார்கள். லெபனோனின் திராட்சை இரசம்போல் அவர்களது புகழ் விளங்கும். இனிமேல் எப்ராயிமுக்குச் சிலைகள் எதற்கு? நானே அவனுக்குச் செவி சாய்த்து, அவன்மேல் அக்கறை கொண்டுள்ளேன் நான் பசுமையான தேவதாரு மரம் போன்றவன். உன் கனி எல்லாம் என்னிடமிருந்தே வரும். ஞானம் நிறைந்தவன் எவனோ, அவன் இவற்றை உணர்ந்து கொள்ளட்டும் பகுத்தறிவு உள்ளவன் எவனோ, அவன் இவற்றை அறிந்து கொள்ளட்டும் ஆண்டவரின் நெறிகள் நேர்மையானவை நேர்மையானவர்கள் அவற்றைப் பின்பற்றி நடக்கிறார்கள் மீறுகிறவர்கள் அவற்றில் இடறி விழுகின்றார்கள்.

**பதில்பாடல் :** உன் கடவுளாகிய ஆண்டவர் நானே. என் மக்களே என் குரலுக்குச் செவிசாயுங்கள்

**நற்செய்தி : மாற்கு 12 : 28 – 34**

அக்காலத்தில் மறைநூல் அறிஞருள் ஒருவர், இயேசுவை அணுகி வந்து, "அனைத்திலும் முதன்மையான கட்டளை எது?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "இஸ்ரயேலே கேள். நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழுமனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக" என்பது முதன்மையான கட்டளை. "உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக" என்பது இரண்டாவது கட்டளை. இவற்றைவிட மேலான கட்டளை வேறு எதுவும் இல்லை" என்றார். அதற்கு மறைநூல் அறிஞர் அவரிடம், "நன்று போதகரே, "கடவுள் ஒருவரே் அவரைத் தவிர வேறு ஒரு கடவுள் இல்லை" என்று நீர் கூறியது உண்மையே. அவரிடம் முழு இதயத்தோடும் முழு அறிவோடும் முழு ஆற்றலோடும் அன்பு செலுத்துவதும், தன்னிடம் அன்புகொள்வது போல் அடுத்திருப்பவரிடம் அன்பு செலுத்தவதும் எரிபலிகளையும் வேறுபலிகளையும்விட மேலானது" என்று கூறினார். அவர் அறிவுத்திறனோடு பதிலளித்ததைக் கண்ட இயேசு அவரிடம், "நீர் இறையாட்சியினின்று தொலையில் இல்லை" என்றார். அதன்பின் எவரும் அவரிடம் எதையும் கேட்கத் துணியவில்லை.

**தியானம்:** அன்பே கடவுள் . அன்புருவான கடவுள் எம்மீது வைத்த மாபெரும் அன்பினால் எம்மை தாயின் கருவிலிருந்து உருவாக்கி பெயர் சொல்லி அழைத்து எம் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் அன்பு செய்து வருகின்றார்.யோவான்: 15:9 என் தந்தை என்மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள். அந்த அன்பான இறைவனை நம் வாழ்வில் முழுமையாக அன்பு செய்ய வேண்டும் என்று இன்று அழைக்கின்றார். தினமும் கடவுளை எம் கண்முன் நிறுத்தி முழு இதயம் ,முழு உள்ளம் , முழு ஆற்றலோடு அன்பு செய்து அவருடன் இணையும் போது இன்னும் அதிகமாக திருப்பலியில் நாம் ஒன்றிக்கும் போது அவரில் நாம் புது ஆற்றல் புதிய உற்சாகம் அன்பான சாமாதானமான உள்ளத்தைப் பெறுகின்றோம். இதனால் நமது குறை நிறைகளோடு நம்மை நாமே ஏற்றுக்கொள்ளும் ஒரு நல்ல மனநிலை உருவாகின்றது.எம்மில் இறைவன் எத்தனையோ நற்பண்புகள் , கொடைகள் ,கனிகளால் , உடல், உள, ஆன்ம நலன்களால் நிறைத்து நம்மை பாதுகாத்து வழிநடத்துகின்றார். இதை உணர்ந்தவர்களாய் நம்மை நாம் அன்பு செய்ய வேண்டும் . அதோடு நாம் திருப்தி அடையாமல் பிறரை அன்பு செய்ய நம் ஆண்டவர் இயேசு கற்றுத்தந்திருக்கிறார். இயேசு பாவிகளை, ஒதுக்கப்பட்டோரை, துன்புறுவோரை, நோயாளரை, தேடிப்போய் அன்பு செய்தார். அன்பு செய்ய நமக்கு அழைப்பிதலோ, ஆலோசனையோ, சொல்லவில்லை ஒர் அன்புக்கட்டளைக் கொடுத்திருக்கின்றார். பிறரது தேவையில் எமது ஆறுதல் தரும் வார்த்தைகள், நமது நேரம், சோர்ந்து போன நேரங்களில் ஆன்மீக உற்சாகம், நோயுற் ற வேளைகளில் அவர்களை சந்தித்து அவர்களுடன் நல்ல உறவுடன் வாழ்ந்து அன்பு செய்வதால் நாம் இறை அன்பு பிறர் அன்புடன் வாழ்ந்து இறையாசீர் பெறமுடியும்